REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

புல்கானின் இந்தியா வருகை

மாலடோவ், குருஷ்சேவ் உடன் வருவர்

புதுடில்லி, செப். 19—

வரும் ஜனவரியில் சோவியத் பிரதமர் புல்கானின் இந்தியா வரும்போது, வெளிநாட்டு மந்திரி மாலடோவும் கூட வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சோவியத் கம்யூனிஸ்டு கட்சிச் செயலாளர் குருஷ்சேவ் கூட புல்கானினுடன் வரக்கூடுமாம். ஆனால், இன்னமும் எதுபற்றியும் முடிவெடுக்கப்படவில்லையாம்.

மலர் 3] சென்னை: புரட்டாசி 4உ செவ்வாய் (20—9—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 5உ புதன் (21—9—55) [இதழ் 84

'கன்னடியர் மீது ஆந்திரரின் ஆக்கிரமிப்பு!'

காங்கிரஸ் தலைவர் குற்றச்சாட்டு!

பெல்லாரி மீண்டும் ஆந்திராவுடன் இணைக்கப்படும்?

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசு

பெல்லாரி, செப். 17—

பெல்லாரி மாவட்டத்தில் உள்ள பெல்லாரி, சிறுகுப்பா, ஹோஸ்பெட் ஆகிய வட்டங்களை மீண்டும் ஆந்திர மாநிலத்துடன் இணைத்துவிட மாநில புனரமைப்புக் குழு சிபாரிசு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. குழுவின் இந்தச் சிபாரிசு, பெல்லாரியில் உள்ள கன்னடியருக்குப் பெரும் கலக்கம் தந்திருக்கிறதாம்.

"இந்த முடிவு, ஜனநாயக விரோதமானது; கன்னடியர்களுக்கு அநீதி இழைப்பது," என்று அவர்கள் கூறுகின்றனராம்.

'இந்தக் 'கன்னடப் பகுதி'யை ஆந்திராவுடன் இணைய விடமாட்டோம்"—என்று ஒரு தலைவர் குறிப்பிட்டிருக்கிறாராம்.

"பெல்லாரி இல்லாது கர்நாடக மாநிலம் அமைவது மிக அவலமானது" என்று கருதப்படுகிறதாம்.

"எங்கள் குருதியைக் கொட்டிக் கொடுத்தேனும், பெல்லாரியைக் காப்போம்," என்று ஒரு கன்னடத் தலைவர் கூறியிருக்கிறாராம்.

ஆந்திரத்திலிருந்த பெல்லாரி, 1953 அக்டோபரில், நீதிபதி மிஷ்ராவின் தீர்ப்புப்படி மைசூருடன் இணைக்கப்பட்டது.

இதற்கிடையில் கர்நாடகப் பிரதேச காங்கிரஸ் தலைவர் சி. ஜே. அம்பிலி, மாநில புனரமைப்புக் குழுவினருக்குத் தந்தி மூலம், 'பெல்லாரியை ஆந்திரத்துடன் மீண்டும் சேர்க்கக்கூடாது,' என்று தெரிவித்திருக்கிறாராம்.

"இந்தப் பகுதிகள் ஆந்திரத்துடன் இணைக்கப்படுவது எந்த வகையாலும் நியாயமல்ல; ஆந்திரரின் ஆக்கிரமிப்பினால், கடந்த காலத்தில், கன்னடியர் எத்தனை துயருற்றனர் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்,"

என்றும் அவர் தந்தியில் கோரியிருக்கின்றாராம்.

மணிக்கு 2,500 மைல் வேகம் பறக்கும் விமானம்

அணு சக்தியால் அமெரிக்கா தயாரிக்கும்

கதிரியக்கத் தாக்குதல் பற்றி பெருங்கவலை?

நியூயார்க், செப். 18—

இன்னும் மூன்று முதல், எட்டு ஆண்டுகளுக்குள்ளாக அமெரிக்கா, அணுசக்தி விமானம் ஒன்றை உருவாக்கும் என்றும், அந்த விமானம் மணிக்கு 2,500 மைல் வேகம் செல்லக் கூடியது என்றும், சுமார் 80 முறை உலகத்தைச் சுற்றிவரும்வரை 'தீனி' கேட்காது என்றும் அமெரிக்கப் பத்திரிகையாளர் இருவர் தெரிவித்திருக்கின்றனர்.

சில பவுண்டு அணுசக்தியைக் கொண்டே அந்த விமானம் இயக்க முடியுமாம்.

இப்போதுள்ள பிரச்சினை எல்லாம், 'விமான ஓட்டிகளை அணுசக்திக் கதிரியக்கத்தினால் பாதிக்கப்படாமல் காப்பாற்றுவது எப்படி?'—என்பதுதான் என்று கூறப்படுகிறது.

விமானம் பறக்கும்போது, கீழே உள்ள மக்கள் அணுசக்தி கதிரியக்கத்தினால் பாதிக்கப்படமாட்டார்கள்; ஆனால், 'விமானம் எங்கேனும் மக்கள் அதிகமாக வாழும் பகுதியில் வீழ்ந்து நொறுங்கினால் என்ன ஆவது?'—என்பது குறித்தும் இப்போது யோசிக்கப்படுகிறதாம்.

மணமாகாத ஆண்கள்!

பெண்கள் பள்ளியில் ஆசிரியராகத் தடை!

கெய்ரோ, செப். 19—

பெண்கள் பள்ளிகளில் மணமாகாத ஆண்கள் ஆசிரியர்களாகப் பணியாற்றுவதை எகிப்திய மந்திரி சபை தடை செய்திருக்கிறது.

பெண்கள் பள்ளிகளில் இப்போது, மணமாகாத ஆசிரியர்களுக்குப் பதிலாக, மணமான ஆசிரியர்கள் அமர்த்தப்படுகின்றனராம்!

பர்மாவின் பொருளாதார நெருக்கடி

இந்தியா ரூ. 15 கோடி கடன் தரும்

இரங்கூன்—

வெளிநாட்டுச் செலாவணித் தட்டுப்பாடு காரணமாகப் பர்மாவிற்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இந்தியா ரூ. 10 கோடி முதல் ரூ. 15 கோடி வரையில் கடன் கொடுத்து உதவக்கூடும் என்று நம்பகமாகத் தெரிகிறது.

கடந்த ஆகஸ்டு திங்களில் பர்மிய வர்த்தக அபிவிருத்தி மந்திரி யு ரஷீத் இந்தியா வந்திருந்த போது இந்தக் கடன் பற்றி பேச்சு வார்த்தை நடந்ததாகவும் கூறப்படுகிறது.

'இந்திய சர்க்கார், ஐந்தாண்டுத் திட்டப்படி அபிவிருத்திக்கான வேலைகளுக்காக ஒதுக்கியுள்ள நிதியிலிருந்து இந்தத் தொகையை பர்மா சர்க்கார் விரும்பும்போது தரும்,' என்று கூறப்படுகிறது.

எல்லோருக்கும் சமசந்தர்ப்பம்!

'குறிப்பிட்ட விகிதத்திற்குமேல் எவரும் இடம் பெறக்கூடாது'

இராணுவ சேவை பற்றி கண்டிப்பான உத்திரவு

புதுடில்லி, செப். 19—

இந்திய இராணுவத்தில் எல்லோருக்கும் சேவை செய்ய சமசந்தர்ப்பமளிக்கும் சிக்கல் தற்காப்பு இலாகாவிற்கு இருந்தது.

"முப்படைக்கும் ஆள் பொறுக்கும்போது, இந்தியாவின் எல்லாப் பகுதியினரும் இராணுவத்தில் இடம் பெறுமாறு செய்ய வேண்டும்; எந்த ஒரு பகுதியினரும், விகிதத்திற்கு மேல் இடம் பெறக்கூடாது"

என்று, இராணுவத் தலைமைக் காரியாலயத்திலிருந்து கண்டிப்பான உத்தரவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

"சாதி வகுப்புப் பாகுபாடு இன்றி, இராணுவம் பரந்த அடிப்படையில் அமைய வேண்டும் என்பதே சர்க்காரின் நோக்கம்,"

என்று, மத்திய தற்காப்பு இலாகா மந்திரி டாக்டர் கே. என். கட்ஜு தெரிவித்திருக்கிறார்.

மிளகு ஏற்றுமதி வரி ரத்தாகிறது!

புதுடில்லி, செப். 19—

மிளகு ஏற்றுமதிக்கு விதிக்கப்படும் ஏற்றுமதி வரியை உடனடியாக ரத்து செய்துவிட இந்திய சர்க்கார் முடிவுசெய்திருப்பதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பின்தங்கிய பகுதிகளில் தொழில் அபிவிருத்தி

புதுடில்லி, செப். 19—

தொழில் அபிவிருத்தித் துறையில் பின் தங்கியுள்ள பிரதேசங்களில், விசேட கவனம் செலுத்துவதற்கும், அப்பகுதி தொழில்களுக்குக் கடன் உதவி அளிப்பதற்காகவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ 15 கோடி வழங்குமாறு இந்திய சர்க்காரிடம் தொழில் நிதிக் கார்ப்பொரேஷன் கோரியிருக்கிறது.

கோவா போராட்டம் கைவிடப்படும்?

புதுடில்லி—

கோவா விடுதலைக்காக இப்போது நடத்தப்படும் 'சத்தியாக்கிரகம்' கைவிடப்படலாம் என்று கருதப்படுகிறது.

காங்கிரஸ் கட்சி கோவா பற்றி மேற்கொண்ட தீர்மானம் சரியானதே என்று கோவா விமோசன சமிதி தலைவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடும் என்று கூறப்படுகிறது.

பண்டித நேருவுடன், அந்த சமிதியைச் சேர்ந்த 9 பேர்கள் ஜெஜே என்பாரின் தலைமையில், சுமார் 40 நிமிட நேரம் பேசிக் கொண்டிருந்தனர் என்றும், அப்போது காங்கிரஸ் தீர்மானம் குறித்து பண்டிதர் விளக்கம் தந்ததாயும் கூறப்படுகிறது.

கிழக்கு வங்கத்தில் வெள்ளம்

ரூ. 32 கோடி சேதம்

டாக்கா, செப். 19—

கிழக்கு வங்கத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் விளைவாக, சுமார் ரூ. 32 கோடி மதிப்புடைய உணவுப் பயிர்கள், பொருள்கள் முதலியனவற்றிற்குச் சேதம் ஏற்பட்டதாக சர்க்கார் மதிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்த முறை, மாநிலத்தில் உள்ள 17 மாவட்டங்களில், 18 மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன என்று தெரிகிறது.

திட்டக் காலம் துவங்குமுன்பே வேலைகள் துவங்குகின்றன

புதுடில்லி, செப். 19—

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வட்டார மக்களுக்கு வேலை தருவதற்காக, குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே இரண்டாம்-ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ந்துள்ள சாலைகள், பாலங்கள் அமைத்தல், வாய்க்கால் வெட்டுதல் முதலிய வேலைகளைத் துவக்கியிருப்பதாக, மத்திய உணவு விவசாய இலாகா மந்திரி ஏ பி. ஜெயின் இன்று மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இந்திய சர்க்கார் சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்காக, சென்ற ஐந்து ஆண்டு காலத்தில் மொத்தம் ரூ 7,00,500 செலவழித்தனர்.

குடியரசுத் தலைவர் பெரான்

இராணுவக் கலகக்காரரிடம் பணிவு

ஆட்சி பீடம் கலகக்காரர் வசமாகிறது?

பியூனஸ் அயர்ஸ், செப். 19—

அர்ஜெண்டைன குடியரசுத் தலைவர் பெரானுக்கு எதிராக இராணுவத்தினரில் ஒரு பகுதியினர் செய்துவரும் கலகத்தை ஒட்டி, கலகம் செய்யும் இராணுவத் தலைவர்களுடன் சண்டை நிறுத்தம் பற்றி யுத்த மந்திரி பிராங்கினின் லூசெரோ சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்; அதன் பிறகு தலைவர் பெரான், ஆட்சிப் பொறுப்பை இராணுவத்தினரிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக அறிவித்திருப்பதாயும் தெரியவருகிறது.

இராணுவத் தலைவர்கள், 'தலைநகரில் குண்டு வீசுவோம்,' என்று அறிவித்ததின் பேரில் அவர்களை, லூசெரோ சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்தார்.

சர்க்கார் வெளியிட்டுள்ள குறிப்பு, "மேலும் இரத்தக்களரி ஏற்படாது தடுக்கவே பெரான் சர்க்கார், சமரசத்திற்குச் சம்மதித்தது," என்று கூறுகிறதாம்.

இப்போது அர்ஜெண்டைனா, கலகக்கார இராணுவத் தலைவர்களின் கீழ் வந்துவிட்டது என்றும், அவர்கள் சண்டையை நிறுத்திக் கொள்ளச் சித்தமாகி விட்டனர் என்றும் வேறொரு செய்தி கூறுகிறது.

குடியரசுத் தலைவர் பெரான் இப்போது பராகுவே தலைநகரான அசன்சியன் நகருக்கு வந்து சேர்ந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

புதுடில்லி, செப். 19—

"தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டப்படி, இதுவரை 4,000 தொழிற்சாலைகளும், சுமார் 9,23,000 தொழிலாளர்களும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர்,"

என்று, தொழில் மந்திரி கந்துபாய் தேசாய் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20—9—'55 செவ்வாய்

'இருபதாம் நூற்றுண்டு இந்தியா'!

ஒருகாலத்தில், இயற்கை, மனிதனை வென்று அடிமை கொண்டிருந்தது. ஆனால், மனிதன், தன்னை அடிமை கொண்ட இயற்கையைச் சிறிது சிறிதாக வெல்ல முயற்சித்துக்கொண்டே வந்திருக்கிறன். அவ்வப்போது தனது அறிவைக் கூர்மையாக்கிக் கொண்டும், ஆற்றலைப் பெருக்கிக்கொண்டும், உறுதியை வளர்த்துக்கொண்டும், மனிதன், பல தியாகங்களைப் புரிந்து, தன்னை இயற்கை அடிமை கொண்டிருக்கும் நிலையை மாற்றி, தான் இயற்கையை அடிமைகொள்ள முற்பட்டுப் படிப்படியான வெற்றியையும் கண்டுவருகிறன்.

'பேராற்றல்கொண்ட இயற்கையை மனிதன் முழுவதுமாக வென்று, இயற்கையின் அந்தப் பேராற்றலைத் தன் வாழ்க்கை நலனுக்குப் பயன்படுத்த முடியும் என்னும் நிலை—இயற்கையை மனிதன் அடிமை கொள்ளும் நிலை இன்னும் மிகக் குறுகிய காலத்தில் மலர்ந்துவிடும்,' என்று, உலகம் திடமாக நம்புவதற்குரிய அறிகுறிகள் தெள்ளெனத் தெரியத் துவங்கியுள்ளன.

வெப்பம் மிகுந்த பாலைவனங்கள் குளிர் மலர்ச் சோலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன.

பனிபடர்ந்த மலை உச்சிகளை மனிதன் தனது கோடைகாலக் குடியிருப்புகளாக்கியிருக்கிறன்.

காறுகளை மடக்கி அணை கட்டி, திசை திருப்பி, மின் விசையும் — பொன் மணியும் உற்பத்தி செய்கிறன்.

அலைகள் ஆர்ப்பரிக்கும் ஆழ் கடலில் நீர்மூழ்கியும், நெடுந் தொலைவு செல்வதற்குக் கப்பலும் விடுகிறன்.

பரந்த வானவெளியை, தான் கண்ட விமானங்களின் விளையாடுமிடமாக்கிக் கொண்டிருக்கிறன்.

எட்டாத எவரெஸ்டு உச்சியை எட்டிப் பிடித்துவிட்டான்.

இவை மட்டுமா?

இன்னும் எத்தனையோ துறைகளில், மனிதன், இயற்கையைத் தனது சேவகனுக்கிக் கொண்டுள்ளான்.

சுருங்கக் கூறின், இன்று, மனிதன், ஆக்கவும் அழிக்கவுமான அளவற்ற ஆற்றல் பெற்றுள்ள அணு யுகத்தில் வாழ்கிறன்.

பாபம் தொலைத்துப்புனிதவாஞக மாறுவதற்கு பெத்லெகேம் யாத்திரை சென்ற மனிதன், இன்று, சந்திரனையும், சூரியனையும் கண்டு வருவதற்கு 'யாத்திரை' கிளப்பும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறன்.

மனிதன் அத்தனை வளர்ந்துவிட்டிருக்கிறன்—இந்த இருபதாம் நூற்றுண்டில்!

இந்த இருபதாம் நூற்றுண்டில், வடஇந்தியாவில் நடைபெற்றுள்ள ஒரு சம்பவம் ஒரு பெரும் உண்மையை நமக்கு உணர்த்துவதாயுள்ளது.

அசாம் மாநிலத்தில் உள்ள சரிம்கஞ்ச் எனுமிடத்தில் அச்சகம் ஒன்றில் திடீரென அச்சு இயந்திரம் ஒன்று பழுதடைந்துவிட்டதாம்; பழுதடைந்த இயந்திரத்தைச் சரிப்படுத்துவதற்காக அச்சிடும் தொழிலாளர்கள் சிலர் 'மந்திரங்கள்' ஓதி, துளசிச் செடி இலைகளால் 'புனித நீரை'க் கொண்டு 'நீராட்டு'ச் செய்து, இயந்திரத்தைக் கழுவினராம்!

ஏதோ 'தீய சக்தி'கள் அந்த இயந்திரத்தைப் பிடித்திருப்பதாக அவர்கள் நம்புகின்றனராம்.

இத்தனைக்கும் பிறகு, அந்த இயந்திரம் சரியாகிவிட்டதா என்பதை, செய்தி நமக்குத் தெரிவிக்கவில்லை.

ஆனால், இந்த இருபதாம் நூற்றுண்டில், அச்சு இயந்திரம் பழுது பட்டதும் அதைச் சரிப்படுத்த மந்திரம் ஓதி புனித நீராட்டுபவர்களாக தொழிலாளரில் சிலர், இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கின்றனர்.

அம்மையும், காலராவும் கண்டால், 'இது காளியின் கோபம்; ஐயனாரின் ஆங்காரம்; ஆகவே, காளிக்கும்—தேவிக்கும் பூசை போடு,' என்று, இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் இன்னும் பழக்கமிருக்கிறது—அம்மை, காலராத் தடுப்புக்கு தகுந்த பலன் மிக்க மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னும்!

மனிதர்கள் நோய்வாய்ப்பட்டால், அவர்கள் நோயினின்றும் விடுபட ஆண்டவனுக்குப் பூசை போடுவோர், 'மனிதன் ஆண்டவன் படைப்பு; எனவே, அவனுக்கு வரும் நோய் தீர ஆண்டவனிடம் முறையிடுவதே முறை,' என்று கூறுவர், சில நேரத்தில்; ஆனால், இயந்திரமோ, மனிதனின் படைப்பாயிற்றே! அதற்கு 'நோய்' வந்தாலும் இந்தியத் தொழிலாளர்கள் ஆண்டவனுக்குப் பூசை போடுகின்றனர்; 'பேய்' ஓட்ட 'புனித நீராட்டு' செய்கின்றனர்!

'ஆண்டவனின் படைப்பு' 'இயற்கையின் உருவம்'-என்று கூறப்படும் மனிதனின் இருதயத்தையே கழற்றி, மாற்றி அமைத்து, மீண்டும் பூட்டி இயக்கும் ஆற்றலை இந்த இருபதாம் நூற்றுண்டு மனிதன் பெற்றிருக்கின்றன்.

இந்தியத் தொழிலாளர்கள், மனிதன் படைத்த இயந்திரம் பழுதுபட்டபோது, அதனைச் சரி செய்ய ஆண்டவனுக்குப் பூசை போடுகிறார்கள்!

இந்த சோகச் செய்தி, 'இந்திய மக்கள் இருபதாம் நூற்றுண்டில் வாழ்பவர்களானாலும், அறிவு வளர்ச்சியில், இன்னும் 'பத்தாம் பசலி'களாகவே இருக்கிறார்கள் என்ற உண்மையைச் சொல்லவில்லையா என்ன?

இந்திய மக்களின் இந்தப் பின்தங்கிய நிலை மாற்றப்பட்டு, உலக மக்களோடு ஒன்றி வாழும் நிலை, எத்தனையாவது ஐந்தாண்டுத் திட்டத்தினால்—அல்லது, எப்போது நடைபெறவிருக்கும் 'வர்க்கப் போராட்டத்தினால் உருவாக்கப்படப் போகிறதோ!

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம்!

அடுத்த ஆண்டுமுதல் அமுலாகும்

ரூ. 6 கோடி செலவிட உத்தேசம்

புதுடில்லி, செப். 18—

உலகத்தில் மிகப் பெரியதாக உருவாகக்கூடிய குடும்பத் திட்டம் ஒன்று அடுத்த ஆண்டு முதல் துவங்கப்படவிருக்கிறது.

73 நகரங்கள், 485 பேரூர்கள், 50,000 கிராமங்கள்—இங்கெல்லாம் இந்த இயக்கத்தினர், வேகமாக வளர்ந்துவரும் மக்கட்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதின் அவசியத்தை மக்களுக்கு வலியுறுத்துவர் என்று தெரிகிறது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 'மத்திய குடும்பக் கட்டுப்பாடு திட்ட நிறுவனம்' ஒன்று அமைக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

இந்தத் திட்டத்திற்காக இந்திய சர்க்கார் சுமார் ரூ. 6 கோடி வரையில் செலவிடுவர் என்று தெரிகிறது.

கைத்தறி துணிகளுக்கு மெருகு-மழமழப்பு!

மாவட்டத்துக்கு ஒரு இயந்திரம் நிறுவப்படும்

அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை, ஆந்திரா மாநிலங்களில் மட்டும் கைத்தறித் துணிகளுக்கு மெருகிடவும், மழமழப்பாக்கவும் மாவட்டத்திற்கு ஒரு இயந்திரம்வீதம் நிறுவத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்தியா முழுமையிலும், 10,000 தறிகளுக்கு ஒரு மெருகிடும் இயந்திரம் வீதம் 65 - இயந்திரங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை, ஆந்திரா மாநிலங்கள் தவிர, மற்ற மாநிலங்களில் தறிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

மத்தியதர வர்க்கப் பெண்கள்

வருமானம் பெற கூட்டுறவு தொழில்கள்

புதுடில்லி, செப். 18—

மத்திய வர்த்தக தொழில் இலாகாவின் ஆலோசனையுடன் மத்திய சமூக நல அபிவிருத்திக் குழுவினர் தயாரித்து வரும் திட்டம் ஒன்றின்படி நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை விரிவாக்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படக்கூடும் என்று தெரிகிறது.

குடிசைத் தொழில் அடிப்படையில், தொழில் கூட்டுறவு நிறுவனங்களை நாடெங்கும் அமைப்பதற்கு, திட்டம் வழி செய்யும்

மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களுக்கு, அவர்கள் வீட்டிலேயே பகுதி நேர வேலை தருவதின் மூலம் அவர்கள் குடும்ப வருமானத்தை அதிகரித்துக்கொள்ள திட்டம் பயன்படும் என்று கூறப்படுகிறது.

1954—55-ம் ஆண்டில், இந்தியாவிலிருந்து திபேத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு ரூ 2,71,07,000 ஆகும்; இதே காலத்தில் திபேத்திலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியான பொருள்களின் மொத்த பெறுமானம் சுமார் ரூ. 1,26,57,000.

'தமிழ் நாடு' பேசுகிறது

புதுடில்லியில் ஒரு புதிய சூழ்ச்சி காட்சியளிக்கிறது!

'தமிழ்நாடு தனி நாடாக உருவாக வேண்டும்' என்ற இயக்கத்தை ஒடுக்கவே, இச்சூழ்ச்சி தோன்றியிருக்கிறதென்று கருதுகிறோம்.

மாகாணப் புனரமைப்புக் குழுவின் அறிக்கை வெளியிடும் தருவாயில், சில அறிவுக் கூர்மையுள்ள அரசியல் வாதிகள், ஒரு நவீனக் கொள்கையை முன்னணியில் கொண்டுவந்திருக்கிறார்கள்; அதாவது, மொழிவழி அடிப்படையில் மாகாணங்களைச் சீர்திருத்தியமைப்பதற்குப் பதிலாக, வெவ்வேறு மொழி பேசும் பகுதிகளை இணைத்து ஒரு 'பிரதேச'மாக அமைக்க வேண்டும் என்று அவர்கள் ஆலோசனை கூறுகிறார்கள்.

தமிழ்நாடு, கேரளம், கன்னடம் என்ற மொழிப் பிரிவினை நிலப் பகுதிகளை, 'தட்சிணப் பிரதேசம்' என்ற பெயரின் கீழ் ஒரு மாகாணமாக அமைக்க வேண்டுமென்பது அச்சூழ்ச்சியாளர்களின் திட்டம்.

தமிழர் நலக் குறிக்கோளைக் கொண்டுள்ள இயக்கங்களும், பொது மக்களும் 'தட்சிணப் பிரதேச' முயற்சியை ஆதரிக்க மாட்டார்களென்று நம்புகிறோம்.

மாகாணப் புனரமைப்புக் குழுவைப் பொறுத்தவரையில், அது, இந்தியா முழுவதையும், 'பிரதேசங்'களாகப் பிரித்துவிடுவதற்கு ஆலோசனை கூறியிருக்கிறதாம்; மொழி வழிக் கொள்கையைக் கொல்வதற்கு இம்முறையை அது கையாண்டிருக்கிறது போலும்!

மொழி வழி மாகாணப் பிரிவினையைப் பொது மேடைகளில் எதிர்த்தவர்களே குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள்; குழுவின் உறுப்பினர்களாவதற்கு முன்னும், ஆன பின்பும், அவர்கள் தம்முடைய உறுதிப்பாடான கருத்துக்களை மறைத்துவைக்க முயலவில்லை; அதற்கு மாறாக, 'வாய்ப்பு' நேர்ந்தபோதெல்லாம், இந்தியாவின் ஒருமைப்பாட்டுக் கொள்கையை வற்புறுத்தி, மொழிவழி மாகாணப் பிரிவினைக் கொள்கையை அவர்கள் ஏளனம் செய்துவந்தார்கள்.

'விசாரணைக் குழு' என்பதற்குப் பதிலாக 'முன்னரே முடிவு செய்துகொண்ட குழு' என்று அதை அழைத்தால் தவருகாது.

இத்தகைய குழுவின் ஆலோசனைகளை மேலும் சீர்கேடடையும்படி செய்வதற்கு 'தட்சிணப் பிரதேச' ஆலோசனை புதுடில்லியில் கிளப்பப்பட்டிருக்கிறது.

இவ்வாலோசனையை உடனடியாகக் கண்டித்து, அதைச் செயற்படுத்தாதவாறு தடுப்பது தமிழ் மக்களின் கடனாகும்.

தமிழ்நாடு தனியரசாக வேண்டுமென்ற கொள்கையை இந்தியப் பேரரசினர் நன்கு உணருமாறு வற்புறுத்த வேண்டும்.

அப்படிச் செய்தால்தான், தமிழர் நலத்தைக் கெடுக்கும் அப்புதிய சூழ்ச்சிக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க முடியும்!

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் அளவுக்கு மீறிய 'தேசீய உணர்வு'

25 இலட்சம் இந்தியர்கள் கவலை

"தென் கிழக்கு ஆசிய நாடுகளில் அளவுக்கு மீறிய 'தேசீய உணர்வு' நிலவிவருவதின் விளைவாக, அந்நாடுகளில் வாழ்ந்துவரும் 25 இலட்சம் இந்திய இன மக்களின் மனதில் பீதியும், கவலையும் ஏற்பட்டிருக்கிறது;

"குறிப்பாக பர்மாவில் வாழ்ந்துவரும் 7 இலட்சம் இந்தியர்களும், மலேயாவிலுள்ள 7 இலட்சம் இந்தியர்களும், சிங்கப்பூரிலுள்ள $1\frac{1}{2}$ இலட்சம் இந்திய மக்களும் அந்நாட்டு மக்களுடைய 'தேசீய உணர்வை'க் கண்டு வெகுவாகப் பீதி அடைந்துள்ளனர்,"

என்று, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவிட்டுத் திரும்பிய பம்பாய் பிரதேசக் காங்கிரஸ் குழுத் தலைவர் எஸ். கே. பட்டீல் பம்பாய் இந்தியப் பத்திரிகைக் கழகத்தில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார்:—

"குறிப்பிட்ட இந்நாடுகளிலெல்லாம் 'தேசீய உணர்வு' அபாயகரமான உருவில் நஞ்சுபோல் வளர்ந்து வருகிறது; அந்நிலை வளருவதற்கு மேலும் அனுமதிக்கப்படுமானுல், அந்நாட்டு மண்ணில் பிறக்காத மக்கள் அனைவரையுமே அந்நாட்டு மக்கள் வெறுக்கத்தக்க நிலைமை ஏற்பட்டுவிடும்;

"தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்துடன் இந்திய மக்கள் முன்னைய நாட்களில் அங்குக் குடியேறவில்லை; பிழைப்பதற்காகவே அந்நாடுகளுக்குச் சென்றார்கள்; சொல்லொணுத் துன்பங்களை அனுபவித்துத் தரிசு நிலங்களைப் பண்படுத்தினார்கள்; அந்நாடுகளின் வியாபாரமும், தொழிலும் வளம் பெறுவதற்குக் காரணமாயிருந்தார்கள்; ஆகவே, மனித உணர்வுடன் அமுலாக்கப்படும் எந்தக் குடிஉரிமைச் சட்டமும், நிச்சயம் அவர்களுக்குக் குடிஉரிமை வழங்கத்தான் வேண்டும்."

நியாயக் குடிவார மசோதா

முதன் மந்திரி கூறியதை விவசாய மந்திரி மறுக்கிறார்?

முதன் மந்திரி காமராசர் சில நாட்களுக்கு முன் தகவல் தந்த—'மொத்த மகசூலில், நிலச் சொந்தக்காரருக்கும்—விவசாயிக்கும் சரி பாதி பங்கீடு' என்ற நியாயக் குடிவார மசோதாவில் மாற்றங்கள் இருக்கலாம் என்று மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

"முதன் மந்திரி என்ன கூறினார்—எந்தச் சந்தர்ப்பத்தில் கூறினார்—என்பது எனக்குத் தெரியாது,"

என்றும் பக்தவத்சலம் குறிப்பிட்டிருக்கிறார்.

'மசோதாவின் அடிப்படையே மாற்றப்படுமா?'—என்று கேட்கப்பட்டபோது, மந்திரி பக்தவத்சலம், புன்சிரிப்பை மட்டுமே பதிலாகத் தந்திருக்கிறார்.

'அந்தமான் தீவா?-ஆயுள் கைதிகள் உறைவிடமல்லவா?'

அன்றைய கேள்வி இன்று 'மறுமலர்ச்சி'யாக உருவெடுக்கிறது

இயற்கை கொழிக்கும் வளமுள்ள தீவாக மாற்றியமைக்க மாபெரும் முயற்சி

"அந்தமான் தீவா? அய்யய்யோ! அது ஆயுள் தண்டனைக் கைதிகள் அனுப்பப்பட்ட இடமல்லவா? அங்கே குடியேறுவதா?" என்று, மக்கள் அச்சத்துடன் வினவிய காலம் இருக்கத்தான் செய்தது. ஆனால், நாடு விடுதலை பெற்ற பின், அத்தீவுகளின் இயற்கை வளமும், அவைகளைப் பயன்படுத்திக்கொள்வதற்குள்ள மார்க்கமும், மக்களுக்கு நன்கு தெரிவதற்கு வழி ஏற்பட்டது.

அத்தீவுகளின் அபிவிருத்திக்காக நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தபின், ஏராளமான பேர் இந்தியத் தீபகற்பத்திலிருந்து இத்தீவுகளில் குடியேறி வருகிறார்கள். சென்னை, திரு-கொச்சி, பம்பாய், மேற்கு வங்காளம் ஆகிய பிரதேசங்களிலிருந்து சுமார் 5,000 பேர் 1949-க்குப் பிறகு அங்கே குடியேறியிருக்கிறார்கள். இந்த ஆண்டில் சுமார் 500 குடும்பங்கள் குடியேறும்; அவைகளில் ஏற்கனவே 431 குடும்பங்கள் சென்றுவிட்டன.

அத்தீவுகளில் மக்கள் தொகை விகிதாச்சாரம் குறைவு தான்; 1951-ம் ஆண்டுக் கணக்குப்படி, மொத்தம் 2,508 சதுர மைல் பிரதேசத்தில் 30,971 பேர்தான் வசிக்கிறார்கள்; எனவே குடியேற்றத்தை அதிகரிக்கச் செய்வதே சர்க்காரின் நோக்கமாக இருந்து வருகிறது. இதற்காக 1955-ல் 20,000 ஏக்கரா நிலத்தை வெட்டித் திருத்தி சாகுபடிக்கு இலாயக்குள்ளதாக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலம் 4,000 விவசாயக் குடும்பங்களுக்கு வினியோகிக்கப்படும். இத்திட்டம் திருப்திகரமாக நடந்து வருகிறது சென்ற இரண்டரை ஆண்டு காலத்தில் சுமார் 10,000 ஏக்கரா நிலம் வெட்டித் திருத்தப்பட்டிருக்கிறது. அது சாகுபடிக்குக் கொண்டுவரப்படுகிறது.

அதிகம்பேர் குடியேறும்படி ஊக்கமளிப்பதற்காகவும், குடியேறியவர்களுக்கு உதவி புரிவதற்காகவும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் பத்து ஏக்கரா நிலம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது அதில் ஐந்து ஏக்கரா நிலம் வெட்டித் திருத்தி நெல் சாகுபடிக்கென்று தரப்படும்; மீதி ஐந்து ஏக்கரா நிலம் திருத்தப்படாதது; அதை வீட்டுக்கும், தோட்டத்துக்கும் உபயோகிக்கலாம். இது தவிர, வீடு கட்டுவதற்காகவும், கால்நடை, விவசாயக் கருவிகள், விதைகள் முதலியவைகளை வாங்குவதற்காகவும், ரூ. 1,730 கடன் தரப்படும்; குடும்பப் பராமரிப்பு, கப்பல் செலவு ஆகியவைகளுக்காக ரூ. 1,050 சகாயத் தொகையும் அளிக்கப்படும்

சமூக நல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. மருத்துவ வசதிகள் போன்றவைகளுக்காக ரூ 3,23,210 இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது

போர்ட்பிளேர் துறைமுகத்துக்கு 40 மைல் தூரத்திலுள்ள பாராடுங் தீவில் எண்ணெய் ஊற்றுக்களும் இருப்பதாகத் தெரியவந்திருக்கிறது. இந்திய பூகர்ப்ப ஆராய்ச்சி இலாகா இதுபற்றிப் பரிசீலனை செய்து வருகிறது. அத்தீவுகளில் தொழில் மூலப்பொருள்களும், வெட்டு மரங்களும் ஏராளமாக இருக்கின்றன; அவைகளைப் பயன்படுத்துவதற்காகத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்துக்குள் சுமார் ரூ.-2,50,00,000 விலை மதிப்புள்ள வெட்டுமரம் உபயோகத்துக்கும் ஏற்றுமதிக்கும் கிடைக்கும். இத்தீவுகளைச் சுற்றி மீன் பிடிப்பதற்கு நல்ல வசதி இருக்கிறது. கயிறு, பாய் வகையறா சாதனங்களை தயாரிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

இந்தியக் கரைக்கும் — அத்தீவுகளுக்கும் இடையில் போக்குவரத்து வசதிகள் சரிவர இல்லாதிருப்பதால்தான், இத்தீவுகளின் அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்படுகிறது. தற்போது அத்தீவுகளுக்கும் — இந்தியாவுக்கும் ஒரு கப்பல் போய்வருகிறது. அந்தமான்—நிக்கோபார் பிரதேசத்திலுள்ள மொத்தம் 204 தீவுகளுக்கிடையில் போக்குவரத்து வசதி திருப்திகரமாயில்லை. அவைகளுக்கிடையே நாட்டுப் படகுகளோ, மெதுவாகச் செல்லுகிற கப்பல்களோ தான் பிரயாணம் செய்ய முடியும்.

ஆழ்கடல் பிரயாணம் செய்யக் கூடிய சில கப்பல்கள் வாங்கப்படுகின்றன; அவை, இந்தியக் கரைக்கும்—அத்தீவுகளுக்குமிடையே போக்குவரத்துக்காக விடப்படும்; போர்ட்பிளேரில் ஐந்து மோட்டார் பஸ்கள் விடப்படும்; சுமார் ரூ. 13,51,000 செலவில் சுமார் 80 மைல் தூரத்துக்குப் புதிய பாதை போடப்படும்; இரண்டாவது திட்டத்தில், இன்னும் 200 மைல் பாதைகள் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

விமானப் போக்குவரத்து சீக்கிரமே ஏற்படலாம்; இவ்வளவு அபிவிருத்திகள் எல்லாம் ஏற்பட்டபின் அத்தீவுகளில் இன்னும் ஏராளமான பேர் குடியேறுவார்கள் என்று எதிர்பார்க்கலாம் எதிர்காலத்தில் அது உல்லாசப்பிரயாணிகள் செல்லுமிடமாகவும் மாறிவிடுமென நம்பலாம்.

பதிவு மட்டும் செய்ய வேண்டுமாம்!

சென்னை, செப். 19—

மாநில சர்க்கார் குமாஸ்தா வேலைகளுக்கு 'திக்குவாய்' நபர்களை நியமனம் செய்யலாமென சென்னை சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஆனால், மனுச் செய்தவருக்கு 'திக்குவாய்' இருக்கிறது—என்று மட்டும் பதிவு செய்யப்படுமாம்!

'திக்குவாய்' நபர் பேசும்போது, அதிகமாகத் தடங்கல் ஏற்படுகிறதா என்பதை, வைத்திய அதிகாரி பரிசோதித்து, சர்க்கார் ரிஜிஸ்தரில் பதிவு செய்வார்.

பல்வேறு மாநிலங்களில் உள்ள தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் அபிவிருத்தி வட்டாரங்களில் திருத்தி அமைக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், இதுவரை மொத்தம் 38 சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

எந்த மாநில நிறுவனங்களுக்கு இந்த நிதி உதவியோ?

125 தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 28 கோடி கடனாக அனுமதிக்கப்பட்டுள்ளதாம்!

தொழில்வாரியாகப் புள்ளிவிவரங்கள்

புதுடில்லி, செப். 19—

தொழில்துறை நிதி கார்ப்பரேஷன் நிறுவனம், சென்ற ஏழு ஆண்டு காலத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் நிறுவனங்களுக்கு — அதாவது 1947 ஆகஸ்டு 15-ந் தேதிக்குப் பிறகு உற்பத்தி துவங்கிய தொழிற்சாலைகளுக்கு — மொத்தம் ரூ 15,22,50,000 கடன் தொகை அனுமதித்திருக்கிறது. இத்தகைய நிறுவனங்களிடமிருந்து, கடன் உதவிக்காக மொத்தம் 86 விண்ணப்பங்கள் கார்ப்பரேஷனுக்குக் கிடைத்தன இதே காலத்தில், பழைய தொழில் நிறுவனங்களிடமிருந்து கடன் உதவிக்காக மொத்தம் 78 விண்ணப்பங்கள் கிடைத்தன. இவ்விண்ணப்பங்களில் பெரும்பாலானவை தொழிற்சாலைகளைப் புதுப்பிப்பது, நவீன சாதனங்களைப் பொருத்துவது, பரவலாக்குவது ஆகியவை சம்பந்தப்பட்டவைகளாக இருந்தன. இந்த நிறுவனங்களுக்குக் கடனாக மொத்தம் ரூ. 12,85,25,000 வழங்கப்பட்டிருக்கிறது.

கார்ப்பரேஷன் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து இதுவரை 125 நிறுவனங்களுக்கு மொத்தம் சுமார் ரூ 28 கோடி கடனாக அனுமதித்திருக்கிறது இத்தொகையில் ரூ. 14 5 கோடி ஏற்கனவே பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது.

1955 ஜூன் 30-ந் தேதியுடன் முடிந்த காலத்தில், பலவகைப்பட்ட தொழில்களுக்கும் வழங்கப்பட்ட ரூ.-7,84,00,000-த்தில், பருத்தித் துணித் தொழில்களுக்கு ரூ.-1,04,50,000-மும், சிமெண்டுத் தொழிலுக்கு ரூ. 80,00,000-மும், மண் பாண்டங்கள், கண்ணாடித் தொழிலுக்கு ரூ. 10,50,000-மும், இரும்பு-எஃகு (சிறு எஞ்சினியரிங் தொழில்கள்)த் தொழிலுக்கு ரூ.-11,00,000-மும், காகித உற்பத்தித் தொழிலுக்கு ரூ 1,07,50,000-மும் வழங்கப்பட்டிருக்கிறது. மற்றும் சர்க்கரைத் தொழில், மோட்டார் கார் உற்பத்தித் தொழில் போன்ற இதர பல தொழில்களுக்கும் கணிசமான நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாண்டில் மொத்தம் ரூ.-11,27,00,000 கடன் உதவி கோரி 46 விண்ணப்பங்கள் கிடைத்தன; 27 விண்ணப்பங்கள் சம்பந்தமாக மொத்தம் ரூ. 7,84,00,000-க்குக் கடன் உதவி அனுமதிக்கப்பட்டது. 1955 ஜூன் 30-ந் தேதியன்று, மொத்தம் ரூ. 2,84,00,000 கடன் உதவி சம்பந்தப்பட்ட ஏழு விண்ணப்பங்களே முடிவு செய்யப்படாமல் பரிசீலனையில் இருந்து வந்தன.

கார்ப்பொரேஷன் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து இதுவரை மொத்தம் ரூ. 1,90,00,000 கடன்களுக்கு வட்டித் தொகையாகக் கிடைத்திருக்கிறது. இன்னும் வரவேண்டிய கடன் தொகைகள் மொத்தம் சுமார் ரூ. 13 கோடி ஆகும்.

'கடன்களின் அசல் தொகைகளில் திருப்பித் தரப்பட வேண்டிய தொகைகள்' என்ற தலைப்பின் கீழ் வரவேண்டியது மொத்தம் ரூ. 1,51,51,000 என இருக்கையில், மொத்தம் ரூ 1,08,04,000 தான் வசூலிக்கப்பட்டிருக்கிறது.

'பக்தூனிஸ்தான்' எதிரொலி

கபார்கான் கைது செய்யப்பட்டதேன்?

கராச்சி, செப். 18—

கான் அப்துல் கபார்கான், தனது இரு சகாக்களுடன் நேற்று கைது செய்யப்பட்டார்.

'இவரைக் கைது செய்வது' என்ற முடிவை, பாகிஸ்தான் மத்திய சர்க்கார் ஏற்கனவே ஏற்றுக் கொண்டுவிட்டிருந்ததாம்.

கபார்கானின் இளைய சகோதரரான டாக்டர் கான் சாகிப், இப்போது பாகிஸ்தான் மந்திரியாயிருக்கிறார்; அவர்கூட கபார்கான் கைது செய்யப்பட்டது குறித்து ஆச்சரியப்படவில்லையாம்!

பலுசிஸ்தான் முழுவதும் சுற்றுப்பயணம் செய்வதற்காகக் குவெட்டா நோக்கி கபார்கான் சென்றுகொண்டிருந்தார்; மேற்கு பாகிஸ்தானை ஒரு மாநிலமாக உருவாக்கும் திட்டத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்ய வருமாறு பக்தூனியர் அழைப்பின் பேரிலேயே அங்கு சென்றுகொண்டிருந்தார்.

கபார்கான் ஏற்கனவே வடமேற்கு எல்லைப்புற மாநிலம் முழுவதும் சுற்றி, 'மேற்கு பாகிஸ்தான் ஒரே உறுப்பாக ஆக்கப்படக் கூடாது' என்று தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்திருக்கிறார்.

மேலும், கபார்கான், பலுசிஸ்தான் சர்க்கார் விதித்த தடையை மீறியிருக்கிறார் என்றும், அதனால் தான் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

"மேற்கு பாகிஸ்தானை ஒரே மாநிலமாக்க வேண்டுமென்பவர்கள் தங்கள் கருத்தை மக்களிடம் சொல்லும்போது, 'அப்படி ஆக்கக் கூடாது' என்ற எனது கருத்தை மக்களிடம் சொல்ல எனக்கும் உரிமை உண்டு," என்று கபார்கான் தெரிவித்திருக்கிறார்.

'பலுசிஸ்தானில் உள்ள பஷ்து மொழி பேசும் மக்களின் தலைவராகக் கபார்கானை ஏற்றுக்கொள்ள முடியாது,' என பலுசிஸ்தான் சர்க்கார் கூறுகின்றனராம்.

"பலுசிஸ்தானிற்குள் நான் நுழையக் கூடாதென பெஷாவர் இரயில் நிலையத்தில் போலீசார் வாய் மூலம் தெரிவித்துள்ளனர்," என்று கபார்கான் தெரிவித்திருக்கிறார்.

"வேறு எல்லா பாகிஸ்தானியரைப் போலவே என்னையும் என்னுடைய நாட்டில், நான் விரும்பும் எல்லாப் பகுதிகளுக்கும் என் போக அனுமதிக்கக் கூடாது என்பது எனக்குப் புரியவில்லை," என்று கபார்கான் தெரிவித்தார்.

"மேற்கு பாகிஸ்தானை ஒரு உறுப்பாக இணைக்கும் திட்டத்தை எதிர்ப்பவர்கள் தாராளமாகத் தங்கள் கருத்தை அறிவிக்கலாம் என்று சர்க்கார் கூறியிருந்தனர்; அந்த உறுதிமொழி என்ன ஆயிற்று? நான் மீண்டும் சொல்கிறேன் — மேற்கு பாகிஸ்தான் ஒரே மாநிலமாவது பக்தூனியர்களின் நலன்களுக்குப் புறம்பானது—எதிரானது" என்றும் கபார்கான் தெரிவித்திருக்கிறார்.

கபார்கானும் அவரது இரு சகாக்களும் இப்போது குவெட்டா அருகில் உள்ள மாச் மத்திய சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இரயில்வே செலவு குறையக்கூடாதாம்

தொழிலியல் முன்னேற்றம் பாதிக்கப்படுமென அறிவிப்பு

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இரயில்வேக்களுக்குச் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள ரூ. 1,480 கோடி எக்காரணத்தைக் கொண்டும் குறைக்கப்படக் கூடாது," என்று, இரயில்வே மந்திரியிடம் வற்புறுத்தப்பட்டுள்ளதாம்!

இந்தச் செலவு குறைக்கப்பட்டால் மேற்கொண்டு 3,000 மைல்களுக்கு புதிய இரயில் பாதைகள் போடுவது முடியாது என்றும், இதன் விளைவாக நாட்டின் தொழிலியல் முன்னேற்றம் வெகுவாகப் பாதிக்கப்படுமென்றும் கூறப்பட்டுள்ளதாம்

இரயில்வேக்கு ரூ 1480 கோடி செலவு என்பது நிதானமான அளவுதான் என்றும், சாத்தியமானால் சர்க்கார் துறையில் மொத்தச் செலவை ரூ. 4,300 கோடிக்கு மேல் அதிகரித்து இரயில்வேக்களுக்கு அதிகச் செலவுக்கு ஏற்பாடு செய்யலாமென்றும் குறிப்பிடப்பட்டதாம்.

1954-ம் ஆண்டில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறித் துணியின் மொத்த அளவு சுமார் 561 இலட்சம் கெஜம் ஆகும்; 1951-ம் ஆண்டில் ஏற்றுமதியானது மொத்தம் 436 இலட்சம் கெஜம்தான்.

100 'நர்சு'கள் வேலை நிறுத்தம்

இரண சிகிச்சை மருத்துவர் மன்னிப்பு கோர கோரிக்கை

லாகூர், செப். 18—

லாகூர் மேயோ மருத்துவமனையைச் சேர்ந்த 100 'நர்சு'கள் கடந்த வெள்ளி முதல் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

இரண சிகிச்சை மருத்துவர் ஒருவர் மிக ஒழுங்கீன முறையிலும், கொடுமையாகவும் ஒரு 'நர்சி'டம் நடந்துகொண்டதைஆட்சேபித்தே அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனராம்.

அந்த இரண சிகிச்சை மருத்துவர், எல்லா 'நர்சு'கள் முன்னிலையிலும் மன்னிப்புக் கோர வேண்டுமென்பதே அவர்களுடைய கோரிக்கையாகும்.

உயிர்துறந்த தொழிலாளிக்கு மரியாதை செலுத்தினர்

ஒரு இலட்சம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம்

சில்சார், செப். 17—

காசார் மாவட்டத்தில் உள்ள 212 தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் சுமார் ஒரு இலட்சம் தொழிலாளர்கள், தேயிலைத் தொழிலாளர் சங்கம் கேட்டுக் கொண்டிருந்தபடி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

சுங்க வரி இலாகா சோதனை ஒன்றின்போது போலீசார் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக ஒரு தொழிலாளி உயிர் துறந்ததாகவும், அவருக்கு மரியாதை செலுத்துவதற்காகவே அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

உப்பு நீரிலிருந்து நல்ல நீர்!

உப்பு நீரை நல்ல நீராக மாற்றுவது ஒரு பெரும் தொழிலாக அமையக்கூடுமாம்.

கடல் தண்ணீரை விவசாயத்துக்கும், தொழில்களுக்கும் பயன்படுத்தும் முறைகளை அமெரிக்கா தீவிரமாக ஆராய்ந்து வருகிறதாம்!

இந்தியாவில் முதல் அணுஉலை

கானடா நிறுவும்: ஒப்பந்தம் கையெழுத்தாகும்

புதுடில்லி, செப். 16—

கொழும்புத் திட்டத்தின் கீழ், இந்தியாவில் அணு உலை ஒன்றை நிறுவுவதற்குக் கானடா முன்வந்துள்ளது. ஆராய்ச்சிக்கும், சோதனைகளுக்கும் இந்த அணு உலை பெரிதும் உதவும்.

"டாக்டர் பாபா உள்ளிட்ட இந்திய விஞ்ஞானிகள் குழு ஒன்று கானடா செல்லும்; அது பற்றிய விவரங்கள் குறித்து விவாதம் நடத்தப்படும்; பின்னர், இருதரப்பிலும் உடன்பாடு செய்து கொள்ளப்படும்; பூர்வாங்க வேலைகள் விரைவில் ஆரம்பமாகும்," என்று செய்திகள் கூறுகின்றன.

சென்னை நகரசபைத் தேர்தல்: இன்று ஆரம்பமாயிற்று

56 இடங்களுக்கு 169 பேர் போட்டியிடுகின்றனர்

சென்னை, செப். 20—

முன்னைய ஆண்டுகளைப்போலன்றி, இவ்வாண்டில், சென்னை நகரசபைத் தேர்தலுக்கு வாக்குப் பதிவு 5 நாட்களுக்கு நடைபெறும். வாக்குப் பதிவு இன்றுமுதல் (20-ந் தேதி) ஆரம்பமாகியுள்ளது; 24-ந் தேதி வரை நடைபெறும்.

மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 8,65,515; அவர்களில் 4,02,545 பேர் பெண்கள்.

50 தொகுதிகளுக்குத் தலா ஒரு உறுப்பினரையும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ள 5 இடங்களுக்கும், பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 4 இடங்களுக்கும், தொழிலாளருக்கான 4 இடங்களுக்கும் உறுப்பினர்களை அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நகரசபையின் மொத்த இடங்கள் 81; கீழ்க்கண்ட முறையில் அது வினியோகிக்கப்பட்டிருக்கிறது.

50 தொகுதிகளுக்குத் தலா ஒன்று வீதம் 50 இடங்கள்; தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு (ரிசர்வ்) 5; பெண்களுக்கு 4; தொழிலாளருக்கு 4; வர்த்தக சபைகள், சென்னை பல்கலைக் கழகம் துறைமுக டிரஸ்ட் பிரதிநிதிகளுக்கு 10; சுகாதார டைரெக்டர், சர்க்கார் சுகாதார எஞ்ஜினியர், நகர அபிவிருத்தி டிரஸ்ட் தலைவர்களுக்கு 3 (நியமனம் பெற்ற இடங்கள்); 5 ஆல்டர்மென்கள் (ஒருவர் பெண்ணாக இருப்பார்); நியமனம் பெறும் உறுப்பினர்களுக்கு ஓட்டுரிமை கிடையாது.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து 'ஆல்டர்மென்'களை நவம்பரில் தேர்ந்தெடுப்பார்கள்.

புதிய உறுப்பினர்களும் ஆல்டர்மென்களும்சேர்ந்து, புதியமேயரை, நவம்பர் மாதத்தில், நகர சபையின் முதல் கூட்டத்தில் தேர்ந்தெடுப்பார்கள்.

வழக்கப்படி, பிராமண வகுப்பைச் சேர்ந்த ஒருவரை இம்முறை மேயராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இத்தேர்தலில், மொத்தம் 63 தொகுதிகளில் 7 பேர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். பாக்கி 56 இடங்களுக்கு இப்போது 169 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.

இரண்டு தவிர மற்ற எல்லா தொகுதிகளிலும் காங்கிரஸ் தனது அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது. இரயில்வே தொழிற் சங்கத் தொழிலாளர் தொகுதிக்கும், ஜவுளி ஊழியர் தொழிற் சங்கத் தொகுதிக்கும் அபேட்சகர்களை காங்கிரஸ் நிறுத்தவில்லை; ஆனால் தொழிற் சங்கத்தில் சேராத தொழிலாளர் தொகுதிகளில் (வடக்கு, தெற்கு) போட்டியிடுகிறது.

சோஷலிஸ்டு தொழிலாளர் முன்னணி 9 அபேட்சகர்களையும், பிரஜா-சோஷலிஸ்டு 4 அபேட்சகர்களையும், கம்யூனிஸ்டுகள் 2 அபேட்சகர்களையும் நிறுத்தியிருக்கின்றனர். சுமார் 100 பேருக்கு அதிகமானவர்கள் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றனர்.

மொத்தம் 514 வோட்டுச் சாவடிகள் இருக்கும். அவை ஒவ்வொன்றிலும் இரண்டு அல்லது அதற்கு அதிகமான 'பூத்'துகள் இருக்கும். சுமார் 850 வாக்காளர்களுக்கு ஒரு 'பூத்' வீதம் இருக்கும்.

ஓட்டுகளின் எண்ணிக்கை செப். 26-ந் தேதி காலை 9 மணிக்கு ரிப்பன் கட்டிடத்தில் (புது பகுதி) ஆரம்பமாகும்.

அர்த்தமில்லாத கொள்கை!

மக்கள் சபையில் 'தோற்றம்'

புதுடில்லி, செப். 17—

இன்று காலையில் பிரதமர் நேரு, மக்கள் சபையில், கோவா பிரச்சினை பற்றிப் பேசுகையில், "சர்க்கார் ஒரே விதமான கொள்கையைத்தான் பின்பற்றி வந்திருக்கிறார்கள்; சில சமயங்களில், சர்க்காரின் கொள்கை அவ்வளவு கண்டிப்பாக அமுல் நடத்தப்படவில்லை என்பது உண்மையே," என்று, குறிப்பிட்டபோது, உடனே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிரித்துவிட்டார்கள்.

நேரு:- "சிரிப்பைக் காணும் போது மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது; ஆனால், இந்தச் சிரிப்புக்கு அர்த்தமில்லை."

காமத்:- "சர்க்கார் கொள்கைக்கு எப்படி அர்த்தமில்லையோ, அந்த மாதிரி!"

நேரு:- "காமத்துடன் விவாதம் செய்ய எனக்குத் திறமை போதாது; யாராலுமே முடியாது."

★

இலங்கை இந்தியர் நிலை அதிருப்திகரமாயிருக்கிறதாம்!

உலக நிலை பற்றி பண்டிதரின் கண்ணோட்டம்

புதுடில்லி, செப். 18—

"இன்று உலக நிலை கடந்த ஆறு மாத காலத்தில் பெரும் அளவு அபிவிருத்தியடைந்திருக்கிறது; ஆனால், 'உலகம் அமைதியில் ஆழ்ந்திருக்கிறது' என்று கூற முடியாது; 'குதிரை'யில் விரல் இல்லையே தவிர, துப்பாக்கிகள், வெடி மருந்து நிரப்பப்பட்ட நிலையில்தான் இருக்கின்றன;

"இன்னும் இருள் சூழ்ந்த இடங்களும், ஆபத்தான 'கேந்திரங்'களும் இருக்கத்தான் செய்கின்றன; என்றாலும், பொதுவாக எல்லாச் சூழ்நிலைகளிலும் ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது.

"அண்மையில் மேற்கு ஜெர்மனிக்கும்—சோவியத் ரஷ்யாவிற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் வெகு முன்னேற்றமானது என்று கூற முடியாவிட்டாலும், ஜெர்மன் பிரச்சினையில் ஏற்படக்கூடிய மோதுதலைத் தவிர்த்திருக்கிறது; இதுவே ஒரு மகத்தான வெற்றியாகும்,"

என்று, பண்டித நேரு, அகில உலக நிலை பற்றிய மக்கள்சபை விவாதத்தின்போது, குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து அவர் குறிப்பிட்டதாவது:—

"இலங்கையில் வாழும் சுமார் 9,00,000 இந்திய வம்சாவழி வந்த மக்களின் நிலை மிக அதிருப்திகரத்தக்கதாயிருக்கிறது; என்றாலும், இந்தியா, இலங்கை, மற்றும் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இலங்கை இந்தியர் ஆகிய எல்லோருக்கும் மதிப்பளிக்கவல்ல ஒரு முடிவு காணுவது சாத்தியமானதே என்று நம்புகிறேன்;

"கோவாவில் இன்னும் போர்ச்சுகீசிய ஆதிக்கம் நீடிப்பது நாகரீகம் மிக்க மனித சமூகத்திற்கு ஒரு அவமானமாகும்; கோவா, காலஞ்சென்றுவிட்ட காலனி ஆதிக்கச் சின்னமாக மட்டுமின்றி, இதர நாடுகளின் கொள்கைகளை அறிந்துகொள்ளும் சோதனை நிலையமாகவும் விளங்குகிறது;

"கோவாவில் 'சத்தியாக்கிரகத்'தை நிறுத்தியது அந்த விஷயத்தில் சிறிதும் சர்க்காரின் அசிரத்தையைக் காட்டுவதாகாது; நாம் மேற்கொண்டுள்ள இதர நடவடிக்கைகள், நிச்சயம் கோவாவிற்கு விடுதலை பெற்றுத் தரும் என்று நம்புகிறேன்."

கைத்தறி துணிகளுக்கு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைவாக இருப்பதால், அவற்றில், மாநிலத்திற்கு மூன்று இயந்திரங்கள் வீதம்தான் ஏற்படுத்தப்படும்; ஆனால், சென்னை, ஆந்திரா மாநிலங்களிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் 10,000-த்திற்கு அதிகமான தறிகள் இருப்பதால், இவற்றில், மாவட்டத்திற்கு ஒரு இயந்திரம் வீதம் ஏற்படுத்தப்படும்.

இதுமாதிரியே, 500 தறிகளுக்கு ஒரு சாயம் போடும் நிலையம் வீதம் இந்தியா முழுமைக்கும் 2,900 சாயமிடும் நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

பிரிவினை முழக்கம்

★

வேலாயுதம்பாளையம்

மலை வீதி மைதானத்தில்

22—9—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: எஸ். திருவேங்கடம்

கொடியேற்றுபவர்: எம். எஸ். மணி

பேசுவோர்:

கண்ணதாசன்

வி. கே. இராசு

இரவு 9½ மணிக்கு, மறுமலர்ச்சி மன்றத்தாரால், 'சிந்தித்துப் பார்' என்ற நாடகம், தோழர் கே. பழனியப்பன் தலைமையில் நடைபெறும்.

★

மேட்டுப்பாளையம்

காந்தி மைதானத்தில்

22—9—55 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

வி. சண்முகநாதன்

பி. ஏ. சாமிநாதன்

எம். ஏ. கோதண்டராமன்

ஆர். வெள்ளிங்கிரி

★

வ. பு. அ. சௌந்திரபாண்டியனர் படிப்பகம்

21—9—55 மாலை 6 மணிக்கு, சென்னை-சூளை வ. பு. அ. சௌந்திரபாண்டியனர் நினைவுப் படிப்பக மனையில் (26, ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு, சூளை) நடைபெறும். அதுபோது, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், சென்னை கோகலே மண்டபத்தில ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவு ஒலிபரப்பப்படும். பின்னர், தோழர் கோ. இளவரசு தலைமையில், ம. மணி, கோ. வேந்தன் குழுவினரால் இன்னிசை நடைபெறும். தோழர் கே. எம். கண்ணபிரான் கொடியேற்றி வைப்பார்.

★

சென்னை 3)-வது வட்டம்

16—9—55 இரவு 9 மணியளவில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், இத்திங்கள் 21-ந் தேதியன்று திராவிட நாடு பிரிவினை நாள், தி. மு. கழக 7-வது ஆண்டு விழாவை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

லாவோஸ் நாட்டு பட்டத்து இளவரசர்

புதுடில்லி, செப். 19—

இந்தோ-சீன நாடுகளுள் ஒன்றான லாவோஸ் நாட்டின் பட்டத்து இளவரசர் இங்கு வந்திருக்கிறார்.

விவசாயிகள் போராட்டம்

112 பேர் கைது

சென்னை, செப். 20—

ஸ்ரீபெரும்புதூர் வட்டம் மாத்தூர் கிராமத்தில், விவசாயி—மிராசுதார் தகராறை ஒட்டி விதிக்கப்பட்டுள்ள 144 தடையுத்தரவை சில விவசாயிகளுடன், தோழர் எஸ். பி. ஆதித்தன் மீறியதின் விளைவாகக் கைது செய்யப்பட்டார் என்று தெரியவருகிறது.

கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்றுவரும் அந்தத் தகராறை ஒட்டி, விவசாயிகள் நடத்திவரும் போராட்டத்தில் இதுவரை 112 பேர் கைது செய்யப்பட்டனர்; அவர்களில் 50 பேர் ஜாமீனில் பின்னர் விடுதலையாயினர் என்றும் தெரியவருகிறது.

சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள்

மாற்றியமைக்க வேண்டுமென பண்டித பந்த் வற்புறுத்தல்

ஜெய்ப்பூர், செப். 19—

"இப்பொழுது நீதி வழங்கும் முறை, காலத்திற்கு ஒவ்வாததாகவும், சிக்கல் நிரம்பியதாகவும் இருக்கிறது; நீதியை விரைவில் வழங்கவும், சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையிலும் மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியமாகும்,"

என்று, மத்திய உள்நாட்டு மந்திரி பந்த், அடிப்படைக் கல்நாட்டு விழா ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

'ஆதிக்கம் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்'

"குடியேற்ற நாட்டு ஆதிக்கம் ஒழிக்கப்பட்டாலன்றி, பல யுத்தங்களின் கொடுமைகளை அனுபவித்துக் களைப்பு அடைந்துள்ள உலகத்தில், அமைதியைக் கொண்டுவருவதற்கு இயலாது,"

என்று, பர்மாப் படைகளின் தளபதிகள் மாநாட்டில் பர்மியப் பிரதமர் யூ-நூ குறிப்பிட்டுள்ளார்.

'பதவி—பரம்பரை பாத்தியதை அல்ல!'

காமராசர் கூறுகிறார்

"ஜனநாயகத்தில் ஒருவருக்கே பதவி இருக்காது—இருக்கவும் கூடாது; பதவி, பரம்பரைப் பாத்தியதை அல்ல; பரம்பரைப் பாத்தியதை கொண்டாடிய மகாராசாக்களும், மன்னர்களும் தங்கள் பதவியை விட்டுக் கொடுத்து ஓடிவிட்ட போது, 'பதவி' கிடைக்கவில்லை என்ற காரணத்துக்காகக் கட்சியை எதிர்ப்பதில் நியாயமே கிடையாது"

என்று, சென்னையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் முதலமைச்சர் காமராசர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யத் தூதுவராலயம் மூடப்படுகிறது

மாஸ்கோ, செப். 19—

கிழக்கு ஜெர்மனியில் உள்ள ரஷ்யத் தூதுவர் அலுவலகத்தை மூடிவிட சோவியத் பிரதமர் புல்கானின் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

'கிழக்கு பெர்லினில் உள்ள ரஷ்யத் தூதுவரே மேற்கு ஜெர்மனியில் உள்ள பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய தூதுவர்களுடன் உறவு பற்றிய பிரச்சினைகளைக் கவனித்துக்கொள்வார்,' என்று, இந்தத் தகவலை அறிவித்த கிழக்கு ஜெர்மன் அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

ஏஜெண்டுதோழர்கட்கு முக்கிய அறிவிப்பு

★

'நம் நாடு' இதழ்களை இதுகாறும் தங்கள் தங்கள் முகவரியிலேயே தபால்காரர் மூலம் பெற்றுவந்த ஏஜெண்டுத் தோழர்கள், இனி, தங்கள் தங்கள் ஊர் தபால் நிலையத்திலேயே பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தபால் அதிகாரிகள் அறிவித்திருப்பதையொட்டி, ஒவ்வொரு பார்சலின்மேலும், 'To be Delivered at Window' என்று எழுதி அனுப்பப்படுகிறது.

எனவே, தபால்மூலம் இதழ்களைப் பெறும் ஏஜெண்டுத் தோழர்கள் அனைவரும், இனி தங்கள் தங்கள் ஊர் தபால் நிலையத்திற்கே நேரில் சென்று, 'நம் நாடு' இதழ்க் கட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

சென்னை-13 } பொறுப்பாளர்
15—9—55 } 'நம் நாடு'

இந்தியாவின் 'பெருமை'

அனுமந்தையா கருத்து

"இந்தியா, பெருமை மிக்க நாடு—என்று வீண் பெருமை கொள்ளாதீர்;

"உலகத்தின் நான்கு பெரிய வல்லரசுகள் ஜினிவாவிலும், ஜூராவிலும் இதர இடங்களிலும் கூடிப் பேசுவதாக நாம் தினந்தோறும் கேள்விப்படுகிறோம்; ஆனால், 'உலகத்திலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா, அத்தகைய சந்திப்புகளுக்கு ஏன் அழைக்கப்படுவதில்லை என்று சிந்தித்தோமா?

"எனவே, நான்கு உலகப் பெரும் வல்லரசுச் சந்திப்புக்கு இந்தியா என்று அழைக்கப்படுகிறதோ, அன்றுதான், 'இந்தியா ஒரு பெரிய நாடு—பெருமைக்குரிய நாடு' எனக் கொள்ளப்பட முடியும்,"

என்று, மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா, கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

குலாம் முகம்மது ஓய்வு பெறுகிறார்

நிரந்தரக் கவர்னர்-ஜெனரலாக இஸ்கந்தர் மீர்ஜா பதவி ஏற்பு

கராச்சி, செப் 19—

பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரலான குலாம் முகம்மது, தன்னுடைய உடல்நலக் குறைவின் காரணமாகப் பதவியிலிருந்து விலகிக்கொண்டிருக்கிறார்.

அவருக்குப் பதிலாக, தற்காலிகமாக அப்பதவி வகித்துவந்த மேஜர்-ஜெனரல் இஸ்கந்தர் மீர்சா, வரும் அக்டோபர் 6-ந் தேதி முதல், குலாம் முகம்மதுவிற்குப் பதிலாக கவர்னர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தனது உடல் நிலை, கவர்னர்-ஜெனரலின் பொறுப்புகளை ஏற்று நடத்துவதற்குத் தேவையான அளவு உரமுடையதாக இல்லாததலால், தான் பதவியினின்றும் விலகிக்கொள்வதாக வானொலி மூலம், குலாம் முகம்மது, நாட்டு மக்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர். இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.